2006 ஆகஸ்ட் 25]

வகையிலே, புலிகள் ஊருக்குள்ளும், நாட்டுக்குள்ளும் நுழையாதவகையில், என்ன பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதோடு, கோம்பையிலிருந்து கோம்பைமெட்டு வரைக்கும் யானைகள் விவசாயிகளின் நிலங்களில் புகுந்து நாசம் செய்கின்ற இந்தவேளையில், பாதுகாப்புக்காக மின் வேலி அமைக்கின்ற திட்டம் இந்த ஆண்டு உண்டா என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலிகளைப் பாதுகாப்பது பற்றியும், புலிகளால் மனிதர்களுக்கு ஆபத்து வராமல் தடுப்பது பற்றியும் நீண்ட அனுபவம் பெற்றவர் தம்பி திரு. நா. இராமகிருஷ்ணன். எனவே, அவரிடமிருந்து அந்த அனுபவங்களை எல்லாம இந்த அரசு பெற்று, புலிகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

100—

கால்நடை மருந்தகம்

***426—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி தொகுதி, குச்சனூர் துணைக் கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள வினாவில் ஒரு திருத்தம், குச்சனூரில் செயல்பட்டு வருவது, துணைக் கால்நடை மருந்தகம் அல்ல, அது கிளை நிலையம் ஆகும். அதாவது Sub–Centre ஆகும்.

இந்த வினாவிற்கான விடை. (அ) தேனி மாவட்டம், குச்சனூர் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சனீஸ்வர பகவான் திருக்கோவிலை வழிபடுகின்ற பக்தர்கள், திருநள்ளாறுக்கு இணையாக வழிபடுகின்ற இடம் குச்சனூர் ஆகும். இந்தப் பகுதியிலுள்ள கால்நடைகள், மேல்சிகிச்சைக்காகச் செல்லவேண்டுமானால், அருகேயுள்ள சின்னமனூர் நகராட்சிக்கு 8 கிலோ மீட்டர் தூரத்திலும், உத்தமபாளையம் பேரூராட்சிப் பகுதிக்கு 16 கிலோ மீட்டர் தூரத்திலும் செல்ல வேண்டியிருக்கிறது. குச்சனூர் கால்நடைக் கிளை நிலையத்தைச் சுற்றிலும் மார்க்கியங்கோட்டை, சங்கராபுரம், புலிக்குத்தி, உப்புக்கோட்டை போன்ற பகுதிகளில் துணைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. குச்சனூர் பேரூராட்சியை மையமாகக் கொண்டு இந்த ஐந்து துணைக் கிளை நிலையங்களை ஒன்றாக இணைத்து, சுமார் 50,000 கால்நடைகள் பயன்பெறுகின்றவகையில் ஒரு கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சனூர் அமைந்துள்ள சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே மூன்று மருந்தகங்கள் மற்றும் எட்டு கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆதலால், இங்குள்ள கால்நடைகளுக்கு இந்த நிலையங்களே போதுமானது என்பதாலும், இந்தக் கிளை நிலையத்தைத் தரம் உயர்த்துவது தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பயனற்ற கால்நடைகள், கேரளாவிற்கு, தேனி மாவட்டத்தின் வழியாக பெரும்பாலான கால்நடைகள் கொண்டுசெல்லப்படுகின்றன. அவ்வாறு கொண்டுசெல்லபபடுகின்ற கால்நடைகள், கால்நடையாகவோ அல்லது வாகனத்தின்மூலமோ கொண்டு செல்வதற்கு இடையில் தேனி மாவட்டத்தில் ஏதாவது ஒரு பகுதியில் ஒரு நாளோ, இரண்டு நாட்களோ தங்க வைத்துவிடுகிறார்கள். வெளியிலிருந்து வருகின்ற

2006 ஆகஸ்ட் 25]

மாடுகளுக்கு பல்வேறுபட்ட நோய்கள் இருப்பதன் காரணமாக, அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகள் பாதிக்காதவண்ணம் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது தனிக் கேள்விக்குரியது. இருந்தாலும், அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியிலே, கீச்சளம் கிராமம் என்பது விவசாயிகள் நிறைந்த பகுதி. கடந்த ஆட்சியிலே எங்கள் பகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைக்கின்றபோதுகூட, நேரடியாக அவரிடம் அந்த ஊர் மக்கள் கோரிக்கை வைத்தார்கள். நீண்டகாலமாக அந்தக் கால்நடை மருந்தகம் திறக்கப்படாமல் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு புதிய கால்நடை மருந்தகத்தை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நேற்றையதினத்திலே என்னைச் சந்தித்து இந்தப் பிரச்சினையைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். அரசு உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள

கிள்ளை பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவமனை இல்லாத காரணத்தால், கால்நடை மருத்துவமனை அமைக்க இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு ஆய்வுசெய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல் 3)*

1—

மின்மாற்றி

வினா எண் 1182—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் சிறப்பு ஊராட்சிக்குட்பட்ட சபேட் நகர் பத்தரை மற்றும் இதர கிராமங்களிலுள்ள மின்னழுத்த குறைவை தீர்ப்பதற்கு புதிய மின்மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் சிறப்பு ஊராட்சிக்குட்பட்ட சபேட் நகருக்கு கண்டர் விளாகம் மின்மாற்றி மூலமாகவும், பத்தரை கிராமத்திற்கு ரீத்தாபுரம்-III மின்மாற்றி மூலமாகவும் மின் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது கொல்லன்விளை, நெல்லிவிளை, சலேட் நகர், பத்தரை ஆகிய இடங்களில் ஒரு முனை மின் பாதையை மும்முனை மின்பாதைகளாக்கிட அபிவிருத்தி மதிப்பீடுகள் (Improvement Estimates) அனுமதிக்கப்பட்டு பணிகள் 22-7-2006 அன்று முடித்து மின்னழுத்த

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.